உ

சிவமயம்.

திருப்பாதிரிப்புலியூர்

சண்முகஞானியார்

அருளிச்செய்த

# முருகாந்தாதி.

288 SUBRAMONYAMLY. ST MADRAS
MV PRESS

PRINTED AT THE

MANONMANI VILASUM PRESS

MADRAS.

1902.



உ

கணபதிதுணை.

# முருகரந்தாதி.

காப்பு.

நேரிசை வெண்பா.

ஆறுமுக னுறுதலத் தையன்முரு
கையன்மேற்
பேறுதரு மந்தாதி பேசுதற்கு—
வீறுதரு
ஐமந்துகர நால்வாயா னன்றமுக்கட்
டோன்றுகும்பக்
கந்தமத தந்திமுகன் காப்பு.

---

நூல்.

கட்டளைக்கலித்துறை.

வேலா சரணஞ் சரணமென்
மேல்வெகு ளாமலினி
மேலாயி னுங்கடைக் கண்பார்
பருப்பத வேந்தன்மகள்

பாலா குறுமுனி யார்க்குந்
திருப்புகழ் பண்ணவர்க்கு
மாலால முண்டவர்க் குமுப
தேசித்த வாண்டவனே. (க)

ஆண்டவ னாயுல கங்காண
வேநின்று மவ்வவர்கள்
வேண்டும் பொருடரு வாய்முரு
காநின்னை வேண்டறியார்
காண்டற் கொருதெய்வம் வேறுள
தோகம லாசனனு
மாண்டரு மாலு மகவானுந்
தேடிய மந்திரமே. (உ)

மந்திர மாறு மனக்குடி
யாவைத்து வாழ்பவர்கள்
சிந்தையிற் றுன்பிலை யேமுரு
காசன னங்கடொறும்
வந்தம ராடிய மாவிலை
யேமன வாசிதனைச்
சந்ததஞ் சாரி நடாத்தவென்
றாலுந் தடையில்லையே. (ங)

தடையேது மில்லைநின் றூடலைப்
பூண்ட தபோதனர்க்கு
மடலே தருமுரு கையா
நினக்கடி யேனிழைத்த
விடரேது முன்ன மறிந்திலன்
பாடற் கிரங்குமின்பக்
கடலே யுனையடைந் தேனென்ன
நீசெய்த காரணமே. (ச)

காரண மானது நெஞ்சம
லாதிலை காரியமோ
மாரண மான மிடியைய
லாதிலை வாசிதனை
யாரணஞ் சொன்ன தலத்தே
செலுத்த வறிவருளும்
பூரண னேமுரு கையா
துணையிலைப் பூமியிலே. (ரு)

பூமியும் வானமு மொன்றிய
பூரணப் பெட்டகத்து
ளாமிருந் தோமிலை நெஞ்சே
நயக்குள நாள்வரைக்கும்

காமமின் னுற்படு காடடைந்
தோமொரு காலத்தினுஞ்
சேம முருகனைச் சேரலை
யென்சொல்வன் றீவினைக்கே. (௬)

தீவினை தீர்க்குந் திருமுரு
காநின் றிருவுருப்போற்
பாவனை செய்து பணிந்தறி
யேன்சிவ பத்தருக்கோ
ரேவலுஞ் செய்தறி யேனிருந்
தேனிறந் தேனினிமே
லாவல்கொண் டாரெனை யாதரிப்
பார்வையத் தஞ்சலென்றே. (எ)

அஞ்சலென் றேயரு ளாய்முரு
காவடி யார்களுறு
சஞ்சலந் தீர்க்குந் தயாநிதி
யேநின் றகைமை கண்டு
கஞ்சனு மாலுமுக் கண்ணனு
மாயிரங் கண்ணனுமே
கெஞ்சிநின் முருன் மலரடிக்
கேகிரு பாகரனே. (அ)

கரனே முதலிய ராவண
ஞர்குலங் கட்டறுத்துத்
திரமே வியதிரு மான்மரு
காநின் றிருவடியென்
சிரமேற் பதித்துச் சிவோகத்தி
லேநின்று சிந்தைசெய்ய
வரமே யருண்முரு காமயி
லேறிய மாணிக்கமே. (௯)

மாணிக்க மொத்த மலர்த்தா
டலேமிசை வைத்துநித்தம்
பேணிப் பணிய வகைதெரிந்
தாரும் பெயர்க்கரிய
வாணிப்பொன் னேயென தாவியு
மியாக்கையு மாக்கமெலாங்
காணிக்கை யாகத்தந் தேன்முரு
காவெனைக் கண்டுகொள்ளே. (௧0)

கண்டுகொ ளத்தகு மோவெவ
ராலுங் கருதிநின்னை
விண்டுசொ லத்தகு மோமுரு
காவெளி யானவர்க்குப்

பெண்டுபிள் ளைத்தகு மோமணி
மந்திரப் பேரெழுத்தைக்
கொண்டுவெ லத்தகு மோவிதி
யால்வந்த கோள்களையே. (கக)

கோளுங் குறுகப் பயப்படுங்
கூற்றனுங் கும்பிடுவான்
வேளு மகிழ்ந்தருள் செய்வா
னமது வினையனைத்து
மாளும் பனிரண்டு காலுள
வாசியை வாங்கியுள்ளே
நாளுஞ் செலுத்த வகைதெரிந்
தோமிலை நன்னெஞ்சமே. (கஉ)

நன்னெஞ்சர் பாலினு ஞானர்தம்
பாலினு நானிலத்தி
லெந்நெஞ்சர் பாலினு மென்பா
லினுமிருந் தேயளிக்கு
நின்னெஞ் சிரங்கு நினக்கிரங்
காதவென் னெஞ்சகநின்
றன்னெஞ் சினும்பெரி தோவறி
யேன் றணிகாசலனே. (கங)

தணிகா சலாநின்றன் ஞமரைத்
 தாடலே யேலிருத்திப்
பணியாத நெஞ்செனக்கேன்படைத்
 தாய்பசு பாசமுத
லணியாத நின்னை யடையாத
 பேரில்லை யாறெருவன்
பிணியா லுலகி லிறத்தனன்
 றேவெனைப் பெற்றவனே. (கச)

பெற்றவர் தாமறி வாரன்றிப்
 பிள்ளையின் பெற்றிதனை
மற்றவர் தாமறி யார்முரு
 காநல்ல வாழ்வருளென்
முற்றுனே நாடி யுரைத்தது
 கோடியுண் டென்மனந்தான்
சற்றுமி ரங்கலை யேசாமி
 கார்த்திகைச் சண்முகனே. (கரு)

சண்முக னேநின் சரணம்
 பராவுஞ் சரணரெலாம்
விண்முகம் பார்ப்பதற் கையமுன்
 டோசொல்லிம் மேதினியிற்

பெண்முக நாடிய பேதைநெஞ்
சாரொரு பேறுமின்றி
மண்முக நோக்குதற் கையமென்
னேமயில் வாகனனை. (கசு)

வாகன மான மனப்பரி
யேறிய மாதவத்தோ
ராகமுந் தானழி யாதுகண்
டாயரு ளேவடிவாய்ச்
சேகர மாமுரு காநினை
யான்றெரி சிப்பமென்றான்
மோகமுஞ் சோகமுங் கோபமுங்
கூடியென் முன்னின்றவே. (கஎ)

முன்னின்று காட்சி கொடுப்பானம்
மெண்ணமுன் னேமுடிப்பான்
பின்னொன்றை நாடுவ தேனோ
முருகன் பெரும்புகழை
யுன்னென் றுணர்த்தநெஞ்சே யுணர்ந்
தாயிலை யுன்னுடன்யா
னென்னென்று சொல்லுவ னென்
பாவந் தன்னை யெடுத்தினியே. ()

எடுப்பானு மென்றலை மேலயன்
  றீட்டு மெழுத்தனைத்துங்
கெடுப்பானு மென் றுங்கெடாதவின்
  பக்கடல் கிட்டிநிற்க
விடுப்பானு மார்க்கும் வினைப்போக
  மூட்டிமெய்ஞ் ஞானச்செல்வங்
கொடுப்பானும் வேறிலை யேமுரு
  காவென் குலதெய்வமே. (கசு)

குலதெய்வ மானநங் கோவே
  குமர குருபரநின்
மலரடி பூசித்து வாழ்த்திநின்
  றூரந்த மாலயனு
மிலகுவ லாரியு மெண்டிசை
  யோரு மிருசுடரும்
புலவருஞ் சித்தரும் பத்தரும்
  பற்பல பூதருமே. (உ0)

பூதமென் றூர்விந்து நாதமென்
  றூரநு போகசிவ
போதமென் றூர்சுழி பேதமென்
  றூர்பொரு ளானதுநின்

பாதமொன் றேயன்றி யேதுமெண்
ணுதவர் பாரிலின்னு
மாதவஞ் செய்திட வேண்டுங்கொ
லோவள்ளி மன்னவனே. (௨௧)

மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்
போற்செய்யு மாதவம்போற்
பின்னொரு மாதவ மில்லைகண்
டாயினிப் பேதை நெஞ்சே
மின்னிடை யார்முக நோக்குவை
யோகதிர் வேன்முருகன்
றன்னிரு தாண்முக நோக்குவை
யோவென்ன சங்கடமே. (௨௨)

சங்கடங் தீர்த்தென்னைத்தற்காக்குந்
தெய்வச் சரவணநின்
பங்கயத் தாள்பணி செய்யார்தம்
பாவமும் பற்றறுமோ
சிங்கமு கங்கொண்டு பண்டோ
ரசுரனைச் செற்றுவெற்றிச்
சங்கங் தொனித்தசெவ் வாயான்
வணங்கிய தற்பரனே. (௨௩)

தற்பர சிற்பர மான
தயாபர சண்முகனின்
பொற்பதம் பூசித்து நேசித்
திடாத புலையனின்னு
மற்புத முத்தி யடைவதுண்
டோவரு ளாயமரர்
கற்பக நாடர சாளுந்
துரைமகள் காதலனே. (௨௪)

காதல்கொண் டேவருங் கானக
வேடிச்சி கட்டழகன்
பாதமொன் றேதுணை யென்றிருப்
பாய்பல காலுநெஞ்சே
வேதனை போமிடி போம்வினை
போமுள்ள மெய்ம்மறந்து
சாதலும் போமெங்கு நீயா
யிருந்து சரிப்பையன்றே. (௨௫)

சரிப்பார் மலையினுங் கானினுஞ்
சென்று சருகருந்தி
யெரிப்பார் தண்ணீருயிர்ப் பெல்லா
மடங்கி யிருந்துதவம்

மரிப்பார் நினதடி யார்முரு
காவவர் மாட்டடியே
னரிப்பா யிருக்க வெனக்கெழுத்
தோநின்னை நம்பியுமே. (உசு)

நம்பிநின் றோர்க்கு தருமுரு
காபுன்மை நாயடியேன்
வம்பறுத் தாள மனமிலை
யோசொல்ல வாயிலையோ
வும்பரைக் காத்தவொள் வேலிலை
யோவென்மு னோடிவரச்
செம்பொற் பதமிலை யோவறி
யேனின்றன் சிந்தனையே. (உஎ)

சிந்தனை செய்ய வருமுரு
காநின் றிருவடியை
வந்தனை செய்து வணங்கிநின்
றால்வந்த வல்வினையு
மந்தக னால்விடு மோலையுந்
தூதரு மட்புவிமேற்
பந்தமுந் தொந்தமும் பாசமு
நாசப் படுமினியே. (உஅ)

இனியே தெனக்கு னருள்வரு
மோவென்றின் றேங்கிநின்றேன்
முனியே லெலையுவந் தாட்கோணம்
முக்கண்ணி மோங்கெடுக்குங்
கனியே யினியகற் கண்டேயிங்
கென்னைக் கருதிவருஞ்
சனியே தவிர்த்தநின் றண்ணளி
யேதென்று சாற்றுவதே. (உகூ)

சாற்றிய வாயின்முமம் மூன்றையுஞ்
சாத்தித் தணிக்கரிய
சீற்ற முதற்பதி ஞலையுங்
தள்ளிச் சிவாசியன்றே
காற்றை விளித்துக் கதிரு
டிருத்துங் கருத்தருள்ளும்
வேற்றுமை யின்றி யிருப்பானென்
னெஞ்சினும் வேலவனே. (ங0)

முருகாந்தாதி முற்றிற்று.

---

## புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| பகவற்கீதை வசனம் | 1 | 4 | 0 |
| ஞானவாசிட்ட வசனம் | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாசதீபிகை | 1 | 0 | 0 |
| பொன்-கைவல்யநவநீதவுரை | 2 | 0 | 0 |
| அரிச்சந்திரபுராண மூலம் | 0 | 8 | 0 |
| சேதுபுராண வசனம் | 2 | 0 | 0 |
| திருவிளையாடற்புராணம் | 2 | 0 | 0 |
| திருவாதவூர்புராணம் உரை | 1 | 0 | 0 |
| சானந்தகணேசர்புராணம்உரை | 0 | 12 | 0 |
| அருணசலபுராணம் உரை | 1 | 0 | 0 |
| சாதகஅலங்காரம் | 0 | 8 | 0 |
| சிவதலமான்மியவசனம் | 0 | 12 | 0 |
| விஷ்ணுதலமான்மியவசனம் | 0 | 8 | 0 |
| சூடாமணி 12-நிகண்டு | 1 | 4 | 0 |
| ,, 10-நிகண்டு | 1 | 0 | 0 |
| ,, 11, 12-வது நிகண்டுகள் | 0 | 8 | 0 |
| நந்தனார்சரித்திரகீர்த்தனை | 0 | 8 | 0 |
| சோதிடபாலசிக்ஷை | 0 | 6 | 0 |
| பரிபூரணானந்தபோதம் | 0 | 4 | 0 |
| ஜீவரக்ஷாமிர்தம் | 4 | 0 | 0 |

கோ. லோகநாதமுதலியார்.

மனோன்மணிவிலாசம் பிரஸ், நெ-29,

வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.